

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நேற்று முன்தினம் (12.06.2024) தலைமைச் செயலகத்தில், 2024–2025 நிதி ஆண்டிற்கான பள்ளிக்கல்வித்துறை மானியக் கோரிக்கை, கொள்கை விளக்கக் குறிப்பு மற்றும் புதிய அறிவிப்புகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை அரசு செயலாளர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் ஆர்.கஜலட்சுமி, ஆசிரிய தேர்வாணையத் தலைவர் வெங்கடப்பிரியா, தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் செயலர் சுதன், (ஓய்வு) பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் முனைவர் க.அறிவொளி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர் மு.பழனிச்சாமி, பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் எஸ்.நாகராஜ முருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், நேற்று முன்தினம் (12.6.2024) குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தையொட்டி சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர் முறை அற்ற மாநிலமாக மாற்றிட அனைத்து அலுவலர்களும் உறுதி ஏற்றனர். இந்நிகழ்வில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத் தலைவர் டாக்டர்.க.மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கோவையில் கழக முப்பெரும் விழா!

# சேலம் மத்திய மாவட்டக் கழகத்தினர் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!



சேலம், ஜூன் 14 -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க கோவையில் தி.மு.க. முப்பெரும் விழா, தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழா, 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றி அளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழி நடத்தி சென்ற கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா ஜூன் 15ஆம் தேதி கோவை கொடிசியா மைதானத்தில் எழுச்சியுடன் நடைபெறுகிறது.

இந்த விழாவிற்கு நமது கழகத் தலைவர் தலைமையில் கூட்டணிக் கட்சி தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

நமது மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழகச் செயற்குழு, பொதுக் குழு, மாநகர பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர்க் கழக, கோட்டக் கழக, ஊராட்சிக் கழக, நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், முன்னாள் -இந்நாள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள், வாக்குச் சாவடி முகவர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அலைகடலென திரண்டு வந்து கோவையில் நடக்க உள்ள கழகத்தின் முப்பெரும் விழாவினை சிறப்பித்திட வேண்டுமாய் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் மற்றும் சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு

# இலவச சிறப்புக் கல்வி - தசைப் பயிற்சி!

## மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அறிவிப்பு!

சென்னை, ஜூன் 14-

தமிழ்நாடு அரசு மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி மூலம் சிறப்பு கல்வி, தசைப்பயிற்சி போன்றவை கட்டணம் ஏதும் இல்லாமல் வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப்பள்ளிகள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் 104 சிறப்புப்பள்ளிகள் விடுதியுடன் செயல்படுகின்றன. விடுதியில் தங்கி கல்வி பயிலும் மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு எவ்வித கட்டணமின்றி சிறப்பு ஆசிரியர்கள் மூலம் சிறப்பு கல்வி மற்றும் தசைப்பயிற்சியாளர் மூலம் தசைப்பயிற்சி போன்றவை வழங்கப்படுகின்றன.

இவை தவிர விடுதியில் தங்கி கல்வி பயிலும் மாணவ / மாணவியர்கள் உணவூட்டு மான்யமாக ரூ.1200 மாதம் ஒரு நபருக்கு வழங்கப்படுவதோடு இச்சிறப்பு பள்ளிகளில் உள்ள இரண்டு சிறப்பு ஆசிரியர்கள், ஒரு தசைப்பயிற்சியாளர் என மூன்று நபருக்கு ஊதிய மான்யம் வழங்கப்படுகின்றது.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் விடுதியுடன் கூடிய மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம், தாம்பரத்தில் செயல்பட்டு வருகின்றது.

இவை மட்டுமின்றி ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி வாயிலாக 430 பகல் நேர பராமரிப்பு மையங்கள் தமிழ்நாடு முழுவதும் வட்டாரத்திற்கு ஒன்று வீதம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மையத்தில் பணியாற்றும் சிறப்பு பயிற்றுநர்கள், தசைப்பயிற்சியாளர்கள் அங்கு வருகின்ற மனவளர்ச்சி குன்றிய மாணவ / மாணவியர்களுக்கு சிறப்புக்கல்வி, மறுவாழ்வு பயிற்சிகள் அளித்து வருகின்றனர். இவர்களைத் தவிர ஒவ்வொரு வட்டாரத்திலும் 5 சிறப்பு பயிற்றுனர்கள்,

1 தசைப்பயிற்சியாளர்களும் உள்ளனர். அவர்கள் அவ்வட்டாரத்தில் உள்ள மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு சிறப்பு கல்வி, தசைப்பயிற்சி போன்றவற்றை வழங்குகின்றனர். பள்ளி செல்லாத குழந்தைகளுக்கு வீட்டிற்கு சென்று கல்வி, தசைப்பயிற்சி போன்றவற்றை வழங்குகின்றனர்.

இவை தவிர ஆரம்பகாலத்திலே இச்சிறப்பு குழந்தைகளை கண்டறிந்து பயிற்சி அளிக்கும் விதமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் மனவளர்ச்சி குன்றியோர்களுக்கான ஆரம்ப கால பயிற்சி மையம் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படுகின்றது. இம்மையங்களில் ஐந்து சிறப்பாசிரியர்கள் உள்ளனர்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 14 வயதிற்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சி இல்லம் செயல்படுத்தப்படுகின்றது. இவ்வில்லத்திலும் 40 நபர்கள் வரை தங்கி பயன்பெறுகின்றனர். தமிழ்நாடு முழுவதும் 67 மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களில் உள்ள மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி, பயிற்சி போன்றவை வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வில்லத்தினை நடத்தும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு ஊதிய மான்யம், உணவூட்டு மான்யம், வாடகை மான்யம் மற்றும் சில்லரை செலவினம் போன்றவை வழங்கப்படுகிறது.

மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் தங்கள் குழந்தைகளை மேற்கண்ட பள்ளிகள் / இல்லங்கள் / பயிற்சி மையங்களில் சேர்த்து கல்வி மற்றும் பயிற்சிகளை எவ்வித கட்டணமின்றி பெற்று பயனடையுமாறு மாற்றுத்திறனாளி கள் நல இயக்குநர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி. - அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. முன்னிலை!

# வில்லிவாக்கம் மேற்கில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா புகழரங்கம்!

## பேராசிரியர் அப்துல்காதர் - நாஞ்சில் சம்பத் - மதுக்கூர்.இராமலிங்கம் புகழுரை! கூ.பீ.ஜெயின் முன்னிலை!

சென்னை, ஜூன் 14 -

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் காலம் உள்ளவரை கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா முன்னிட்டு 94 வது நிகழ்ச்சியாக “இருள் அகற்றிய சூரியன்! இனம் காத்த நாயகன்!!” எனும் தலைப்பில் புகழரங்கம் இன்று (14.6.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணியளவில், சென்னை, வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில் சிவன் கோயில் வடக்கு மாட வீதியில் பகுதிச் செயலாளர் கூ.பீ.ஜெயின் எம்.சி. தலைமையில் நடைபெறுகின்றது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ. வெற்றி அழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பேராசிரியர் அப்துல்காதர், நாஞ்சில் சம்பத், மதுகூர்.இராமலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் வே. வாசு, டி.வி.செம்மொழி எம்.சி., சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், லதா வாசு எம்.சி, ஆர்.வரதன், ஜி,ஜெ.பிரபு, எம்.சுரேஷ், ஜெ.எஸ். பிரபு, வி.து.ராமமூர்த்தி, பா.இளையா, மு.கலைச்செல்வி, ஐ.சி.எப். சுரேஷ் பாபு, சிட்கோ சேகர், க.சுகுமா ரன், பா.ஜானி, சொ.முருகேசன், ப.லோகு பாபு, ஜெ.தங்கராஜ், ஆர். கோபாலகிருஷ்ணன், மா.கபிலன் கோ.மணி வேந்தன், பா.தே.தீனதயாளன், கே.எஸ்.பாபு, க. மணிமாறன், எஸ்.கே.பி. தீபக் குமார், ம.சுந்தர் எபி, ஆ.சக்திவேல், சிட்கோ. பி.சுரேஷ்பாபு, பூ.சத்தியேந்திரன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு தலைவர் ப.ரங்கநாதன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளரும், வில்லிவாக்கம் தொகுதி பார்வையாளர் வி. கௌதமன், கே.எஸ். ரவிச்சந்திரன், பி.கே. மூர்த்தி, கே. சந்துரு, சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என். வி.எம்.ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த, சி. மகேஷ் குமார், பரிதி இளம்சுருதி, வழக்கறிஞர் இந்திரஜித், கோ.ஏகப்பன், தேவ ஜவகர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன், இசட். ஆசாத், சொ.வேலு, சரிதா மகேஷ் குமார், பா.ஸ்ரீராமுலு, டாக்டர். ஜி.சாந்தகுமாரி, ஐ.சி.எப். வா.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி.ராஜாகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம். சாமிகண்ணு, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி.ஜெ.துளசிங்கம், லயன் பி.உதயசங்கர், ரமேஷ் (எ) நீலகண்டன், எம். இப்ராஹிம் கனி, அ.நிர்மலாதேவி, டாக்டர். ஏ.பி.பூர்ணிமா, இரா. கலைச்செல்வி, டி.லோகேஷ், ஜெ.பாலமுருகன் பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், அற.டி.சங்கர்நானா, நா.துலுக்காணம், எல். பி.எப்.மோகன், துரைகண்ணன், ஜி.தாமோதரன், ராஜேஸ்வரிஸ்ரீதர், ஜி.வி. நாகவள்ளி, எம்.பெரோஸ் கான், பி.விஜயகுமார், எம். விநாயகம், அற.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், க. பா.பிரதீப்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, து. ஆயிரம், புரசை டி.சம்பத், டி.தாமோதரன், டபல்யு. அமுல், நா.அறிவுடைநம்பி, எ.வேதா, விக்னேஷ் சீனிவாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி.செ.துரை, வி.சபாபதி, வ.ரமேஷ்பாபு, மு.பரமானந்தன், டி.ஸ்டாலின், ந.குமார், எ.சத்தியநாராயணன், கி.ஜெய்சங்கர், ப.செந்தில்குமார், எஸ். துரைபாபு, கே.ராஜா, வி. ஆர்.ஜெயக்குமார், ப. மலர்கொடி, சிட்கோ. எஸ்.அன்வர்தீன் சாந்தி பில்லி, தே.ச. சுந்தர், ஜி. கே.வெங்கட், வழக்கறிஞர் பி.கோபிலதா, வழக்கறிஞர் ஜெ.சரவணன், வழக்கறிஞர் மா.முரளி வினோத், வழக்கறிஞர் என்.விஜயகுமார், ஓசோன் மனோகரன், பொறியாளர் எம்.எஸ்.ரமேஷ், செங்கை சண்முகம், டாக்டர் எம்.ஜி.திவ்யானந்தன், வழக்கறிஞர் சாந்தனு, ஸ்டண்டு வி.புஷ்பராஜ், ஜிம்.முரளி (எ) சையத், டி.பாஸ்கரன், ச.காளிதாசன், சிட்கோ த. விஜயகுமார், கே.தங்கவேல் ராஜன், டி.சையத்தியமத்துல்லா, ஆ.சுரேஷ்குமார், வழக்கறிஞர் கே.சுப்பிரமணி, வழக்கறிஞர் எம். குணசேகரன், எஸ்.பி. ஜெகா, பி.ஜெயந்தி, உ.பிரசன்னவேலன், வழக்கறிஞர் பா.சுந்தர், கே.ஜி.அய்யாதுரை, எம்.முத்து, ஆர். ராஜசேகர், என்.மோகன்குமார், வி.ராஜமாணிக்கம், சா. அருண்குமார், சண்முகசுந்தரம், ராபர்ட் ராஜன், எம்.விஜயகுமார், க.பிரகதீஷ்வர், எஸ்.எஸ்.மணிகண்டன் அனுசுயா பாண்டுரங்கன் மு.கிருஷ்ணவேணி வெ. ராஜேஷ் எஸ். வெற்றிவேல் சண்.இரவி, ம.ஜெகதீஸ்வரன், டி.ஞானகிராமன், பிரேமா தயாளன், ஆர்.இருதயமேரி, வழக்கறிஞர் ஜி. அய்யனார், ஆர்.மோகன்ராஜ், டி.எச்.செல்வராஜ், ந. வேணு, பி.வேணுகோபால், எ.மணிமாறன் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இந்நிகழ்ச்சிக்கு வட்டச் செயலாளர்கள் ஆர்.தீனதயாளன், மா.அகிலன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



சென்னை, கிண்டியில் உள்ள தேசிய முதியோர் நல மருத்துவ மையத்தில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ சேவையினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், தேசிய முதியோர் நல மருத்துவமனை இயக்குநர் மரு.தீபா, கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இணை இயக்குநர் மரு.மணவாளன், மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ண மூர்த்தி, துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள், மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.


ஐந்தாம் ஆண்டு

நினைவு அஞ்சலி





தோற்றம் 10.09.1937

மறைவு 14.06.2019

முன்னாள் பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர்

முன்னாள் பாராளுமன்ற மேலவை உறுப்பினர்

எஸ்.சிவசுப்ரமணியன் MA.,BL.,

வருத்தத்துடன்

அரியலூர் மாவட்ட தி.மு.க